# இரட்சிப்பு
## RATCHIPPU

RATCHIPPU = SALVATION


| Volume-12 | May-2023 | Issue-12 |
|---|---|---|

Price Rs.5-00 | Annual Subscription Rs.60/-











## இயக்குநர் கடிதம்...

From Mssion Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் அனைவருக்கும் எங்கள் அன்பின் 'பெந்தெகொஸ்தே திருநாள்' மற்றும் 'மே-தின' நல்வாழ்த்துக்கள். கோடை காலம் துவங்கிவிட்டது. கோடைகாலத்தின் மையப்பகுதியான இம்மாதத்தில வெயிலின் தாக்குதல் அதிகமாக இருக்கும். எனவே, நம்மையும் நம்மைச் சூழ்ந்தவர் களையும் மிகக் கவனத்துடன் பாதுகாத்துக்கொள்ளுவோம்.

கடந்த ஆண்டில் (2022) நடத்தப்பட்ட இரட்சிப்பு வேதாகம போட்டிகளில் பரிசு பெற்றவர் ளின் பெயர்-பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது (பக்கம் 6 மற்றும் 7). பரிசுபெற்றவர்களை கடவுளின் திருப்பெயரில் வாழ்த்துகிறோம். இப்பரிசுகள் 2022-காலண்டர் ஆண்டுக் கானவை என்பதையும், 2023ம் ஆண்டுக்கான பரிசுகள் அடுத்த ஆண்டு (2024) வழங்கப்படும் என்பதையும் போட்டியாளர்கள் நினைவில் கொள்ள வேண்டுகிறோம்.

நமது ஊழிய இயக்குநரின் இம்மாத ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். 'இரட்சிப்பு' பத்திரிக்கை ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங் கள், வலைதள ஊழியங்கள் (www.ratchippu.in/ratchippu.in), புத்தக-வெளியீட்டு ஊழியங் கள், NMS-MISSIONARY ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் ஆகிய அனைத்து ஊழியங்க ளுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இம்மாத 'ஜெப-ஜன்னல்' ஜெப-நேரங்களில் (மே 12, 19, 26) ஜெபிக்கவும், 'அனைவரும்-ஊழியத்தில்' - என்ற நமது கைபிரதி ஊழிய திட்டத்தில் இணைந்து செயல்படவும் உங்களை அன்புடன் அழைக்கிறோம். வேதாகம போட்டிக்கான பதில்கள், ஜெப-குறிப்புகள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கை அனுப்புவோர் ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்புங்கள் (Online-வங்கி மற்றும் தொடர்பு விபரம் பக்கம் 12-ல்).

கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---

**வேத-வரிகள்-148** **அப்போஸ்தலர்-2:4**

# தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

| சத்திய வேதம் (ரேனியஸ்-1840) | பரிசுத்த வேதாகமம் (பவர்-1867) |
|---|---|
| சீஷர் எல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, பரிசுத்த ஆவியானவர் தங்களுக்குக் கொடுத்த திராணி யின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கி னார்கள். | சீஷர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின் படியே ஒவ்வொருவரும் வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங் கினார்கள். |
| **திருவிவிலியம் (பொது-1995)** | **பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)** |
| சீடர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப் பட்டனர். தூய ஆவியின் தூண்டுதலினால் அவர்களில் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங் கினார்கள். | சீடர்கள் எல்லோரும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு, பல்வேறு மொழிகளில் பேச ஆரம்பித்தார்கள். இவ்வித வல்ல மையை பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார். |

பெந்தெகொஸ்தே திருநாள் சிறப்பு தேவசெய்தி...

# பெந்தெகொஸ்தேயின் ஆசீர்வாதங்கள்



அருட்திருமதி
கிரேஸ் ஐடா ராஜன்

பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, சீடர்கள் எல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள். அப்போஸ்தலர்–2:1,4


## Rev. Dr. Grace Ida Rajan

ELDER - METHODIST CHURCH IN INDIA AND INTERDENOMINATIONAL PREACHER
COIMBATORE, SOUTH INDIA


அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் காணப்படும் பெந்தெகொஸ்தே நிகழ்வின் ஆசீர்வாதங்கள் சிலவற்றை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ஒற்றுமை என்னும் ஆசீர்வாதம்:

சங்கீதக்காரரர் இவ்விதம் கூறுகின்றார்: இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?... அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர் வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார் (சங்-133). பெந்தெகொஸ்தே நிகழ்வில் 120 விசுவாசிகள், ஓரிடத்தில் கூடினர் (அப்-1:15,2:1). இயேசுவின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து ஒற்று மையாக ஜெபித்த இவர்கள்மேல் ஜீவனுள்ள தேவனின் ஆவியானவர் இறங்கி (அப்-1:5,14), சீஷரிடையே ஒற்றுமை என்னும் ஆசீர்வாதத்தைக் அருளினார். ‘‘இரண்டுபேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்’’ என்றுசொன்ன இயேசு (மத்-18:20), அங்கே வந்து அவர்களை ஆசீர்வதித்தார்.

அனைவரையும் உள்ளடக்கிய ஆசீர்வாதம்:

வரலாற்றில் முதன்முறையாக பரிசுத்த ஆவியானவர் யோவேலின் தீர்க்கத்தரிசனத்தை நிறைவேற்றும் வகையில் விசுவாசக்கூட்டத்தினர் மீது இறங்கினார்: ‘‘நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்தி களும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள்; ஊழியக்காரர்மேலும் ஊழியக்காரிகள் மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன் (யோவே-2:28, 29). பெந்தெகொஸ்தே நாளின் விசுவாசக்கூட்டம் ஆண்களையும் பெண்களையும் உள்ளடக்கியதாகும் (அப்-1:14). இது பெண்களுக்கு ஊக்கம் அளிப்பதாக அமைந்துள்ளது. அப்போஸ்தலனாகிய பேதுரு ஆண்கள், பெண்கள் மாத்திரம் அல்ல இறைமக்கள் கூட்டம் முழுவதையும் இந்த ஆசீர்வாதத்தில் இணைக்கிறார். ‘‘நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக் குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் (1பேது-2:9).

உலகளாவிய நற்செய்தி என்னும் ஆசீர்வாதம்:

அன்று 120பேரால் பேசப்பட்ட பல்-மொழி அற்புத-வரம் அங்கு ஆயத்தப்படுத்தப்பட்டிருந்த

மக்களுக்கு நற்செய்தியை பறைசாற்ற பயன்பட்டது ஒரு அதிசயம் அல்லவா? கடவுளுக்குப் பயந்த யூதர்கள் வானத்தின் கீழுள்ள ஒவ்வொரு தேசத்திலிருந்தும் பெந்தெகொஸ்தே நிகழ்விற்காக அங்கே கூடியிருந்தனர் (அப்-2:5). உலகமே அந்த 120சீடர்களின் அருகாமையில் இருந் தது. மக்களுக்கு நற்செய்தியை பகிர்ந்துகொள்ள பல மைல்கள் பயணம் செய்யாமல் ஓரிடத்தில் நற்செய்தியை அறிவித்த நிகழ்வு இன்றைய செய்தி ஊடகங்களின் நல்ல பயன்பாட்டையே நமக்கு நினைவூட்டுகின்றது.

மொழிகள் என்னும் ஆசீர்வாதம்:

இந்த யூதர்கள் பல தேசங்கள் மற்றும் வெவ்வேறு மொழிபேசும் இடங்களிலிருந்தும் வந்திருந்தனர். பார்த்தரும், மேதரும், எலாமீத்தரும், மெசொப் பொத்தாமியா, யூதேயா, கப்பத்தோக்கியா, பொந்து, ஆசியா, பிரிகியா, பம்பிலியா, எகிப்து என்னும் தேசத்தார் களும், சிரேனேபட்டணத்தைச் சுற்றியிருக்கிற லீபியா வின் திசைகளிலே குடியிருக்கிற வர்களும், இங்கே சஞ்சரிக்கிற ரோமாபுரியாரும், யூதரும், யூதமார்க்கத்தமைந்த வர்களும், கிரேத்தரும், அரபியருமாகிய நாம் நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவ னுடைய மகத்துவங்களைப் பேசக்கேட்கிறோமே என்றார்கள் (அப்-2:9, 10, 11). அப்போஸ் தலர் புத்தகத்தில் அந்நியபாஷை வரம் இவ்வாறு புரிந்துகொள்ளப்பட்ட ஒரே இடம் இதுதான்! இவ்வித மொழி-அதிசயத்தை ஆசீர்வாதத்தை நாம் மீண்டும் பெற முடியுமா?

கேமரூன் டவுன்செண்ட், கௌத்தமாலாவில் (Guatemala) மிஷனரியாக இருந்தபோது, அங்கிருந்த ஆதிவாசி தலைவர் ஒரு கேள்வியை கேட்டார். ‘‘உங்கள் கடவுள் மிகவும் பெரியவர் என்றால், அவர் ஏன், என் மொழியைப் பேசவில்லை?’’ இக்கேள்வி டவுன்செண் டின் வாழ்க்கையை மாற்றியது. டவுன்செண்ட் பைபிள் விற்கும் தன் முயற்சியை கைவிட்டு, அந்த பழங்குடியினர் மத்தியில் தங்கி, அவர்களுடைய சிக்கலான மொழியைக் கற்றுக் கொண்டார், அதற்கு எழுத்துக்களை உருவாக்கி, இலக்கணத்தை பகுப்பாய்வு செய்தார். மேலும் புதிய ஏற்பாட்டை பத்து வருடங்களில் மொழிபெயர்த்தார்.

நாமும் இன்று மக்களின் தாய்மொழிகளில் வேதாகமத்தைக் கொடுப்பதன் மூலம் நற் செய்தியை மக்களின் தாய்மொழிகளில் அறிவிக்கும் கருவிகளாக இருக்க முடியும்.

திரள் கூட்டம் என்னும் ஆசீர்வாதம்

பெந்தெகொஸ்தே நிகழ்வில், பேதுருவின் பிரசங்கத்தின் விளைவாக, ஏறக்குறைய 3000 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள் (அப்-2:41). அப்போஸ்தலர் புத்தகம் திருச்சபையின் வளர்ச்சி மற்றும் பெருக்கம் பற்றி கூறுகிறது. விசுவாசிகளின் பெருக்கம் என்பது நமது உறுதியான ஆசீர்வாதமும் கூட! அப்.யோவான் அந்த ஆசீர்வாதத்தைப் பற்றி இப்படியாக பதிவு செய்கிறார்: ‘‘இவைகளுக்குப் பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல கோத்திரங் களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாதது மான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கை களில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியான வருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன் (வெளி-7:9). பரிசுத்த ஆவியானவரின் அருளால் நாம் இந்த ஆசீர்வாதம் நிகழ காரணராக வேண்டும். மேற்கண்ட ஆசீர்வாதங்களைப் பெறும்படிக்கு, நம்மைச் சுற்றியுள்ள மக்களுக்கு நாம் ஆசீர்வாதமாக இருக்க என்றும் பிரயாசப்படுவோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
அருட்திருமதி. அறிவர். கிரேஸ் ஜடா ராஜன்

கிரேஸ் ஜடா ராஜன், ஒரு மெதடிஸ்ட் ஆயர். கடவுளுடைய வார்த்தையை நேசித்து போதிப்பவர். இவர் பல்வேறு சபைப்பிரிவுகளிடையே பயன்படுத்தப்படுகிறார். வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகளிலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். அலை பேசி: 8438459359

# இரட்சிப்பு வேதாகம போட்டிகள் - 2022

## பரிசு பெறுவோர் பட்டியல்

கடந்த 2022ம் ஆண்டில் நடத்தப்பட்ட இரட்சிப்பு வேதாகம போட்டிகளில் 1ம், 2ம், 3ம் பரிசு பெறுபவர்களின் பெயர்கள் பின்வருமாறு:

### 1. முதலாம் பரிசு பெறுபவர்கள்:

**[**12 போட்டிகளிலும் (12 மாதங்களிலும்) சரியான விடையெழுதியவர்கள்**]**

1. ஏஞ்சலின் பிரியா TIN
2. ஏஞ்சல் ராஜதுரை CHE
3. ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
4. அரோமா சாத்ராக் TIN
5. ஆர்தர் மாசில்லாமணி CHE
6. அருள் செல்வி (தர்ஷினி) VIR
7. அருள்செல்வி ஜாண்ஸன் TIN
8. பங்கஜம் வில்சன் CBE
9. பெல்சி தங்கராஜ் CHE
10. பெனிட்டா பிராங்க்ளின் CHE
11. செலினா பென்ஸி வில்சன் DR. KUW
12. சந்திராபாய் மாசிலாமணி AVD
13. சந்திரலேகா KAL
14. சந்திரா சாமுவேல் TIN
15. சார்லட் டேவிட் CHE
16. கிறிஸ்டல் ஜாய் யோபு TPT
17. கிறிஸ்துதாஸ் GOP
18. கிறிஸ்டி ஞானராஜ் CHE
19. சிசிலி புஷ்பம் டேவிட் CHE
20. டேனிங் சொர்னா ஜெஸ் MSK-TIN
21. டேவிட் ஜே.ஆர். CHE-CBE
22. தெபோராள் ஆனந்தமணி CHR-TUT
23. டெல்பி பாத்திமா CHE
24. தேவநேசம் ராஜாசிங் CHE
25. எஸ்தர் D.R. IDA-TIN
26. எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
27. ஞானம் ஜெபராஜ் TIN
28. ஞானராணி G. PAN-TVR
29. கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
30. கிரேஸியா ஜெயபால் CHE
31. கிரிசெல்டா செய்லர் CHE
32. ஹெலன் ஜான்ஸி ராணி TIN
33. ஹெலன் ஜெனிபர் பாண்டியன் CHE
34. ஹெலன் திலக் TUT
35. ஹேமா அஜீத் CHE
36. ஹேமா கேப்ரியேல் BAN
37. ஹிம்லா ராஜகுமாரி CHE
38. இந்திரா கெத்ஸி டேவிட் TIN
39. ஜமீலா செல்வராஜ் CHE
40. ஜேன் தர்மராஜ் TIN
41. ஜான்ஸி சந்தியா MAR-TIN
42. ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
43. ஜெபா ஜெயராஜ் AVD
44. ஜெபசீலி கிளின்டன் CHE
45. ஜெபஸ்டின் G. KAN-TIN
46. ஜெபா சீனி MAR-TIN
47. ஜெமீலா நிக்ஸன் CHE
48. ஜெனித்தா செல்வின் TIN
49. ஜெரின் ஸ்டீபன் CHE
50. ஜெஸி செல்லதுரை CBE
51. ஜெயா ஆல்பர்ட் KUM-TAN
52. ஜோனா ஸ்டீபன் AVD-CHE
53. ஜாய்ஸ் பாண்டியன் KLK-CHE
54. ஜோஸ்பின் ஜெஸி CHE
55. ஜூலியட் ஜெயக்குமார் TIN
56. கலா கிருபாகரன் MAR-TIN
57. கலையரசி செல்வராஜ் CHE
58. கிருபா சாந்தி K.V. CHE
59. கோயில்பிள்ளை ஞானத்தாய் APM-TEN
60. லீலா டேவிட் CHE
61. லீலா ஜோஸப் CBE
62. லில்லி ஜாண்ஸன் CHE
63. லிஸி டென்சிங் TIN
64. மல்லிகா V. CHE
65. மணிமேகலை ஜெயக்குமார் TIN
66. மனோகரம் தனராஜ் NAZ-TUT
67. மெர்சி தனராஜ் CBE
68. மெரிட்டா ஜெயபாலன் TCY
69. மியூரியல் புஷ்பராஜ் CHE
70. நிக்ஸன் எவர்பிரைட் TIN
71. ஆலிவ் ஜெயபாலன் CBE
72. பாக்கியபாய் ஆரோன் TIN
73. பெர்சி பால் பொன்சிங் SAW
74. பிங்க்லின் தேவமலர் CHE
75. பிரேமா பூபாலன் AVD-CHE
76. பிரேமா ஸ்டாலின் CHE
77. பிரின்ஸ் தயாநிதி CHE
78. ராஜ பிரமீளா TPT
79. ராஜ்மேரி சார்லஸ் KER
80. ரமோலா அதிசயராஜ் TIN
81. ராணி பிரபாகரன் TIN
82. ராணி சாமுவேல்ராஜ் CHE

முதலாம் பரிசு - பட்டியல் தொடர்ச்சி:

83. ரத்னா டென்னிஸன் CBE
84. ரெஜினாள் விக்டர் TIN
85. ரோஸ்லின் மார்கிரெட் CHE
86. ரோஸி ஸ்டீபன் CHE
87. ரூபவதி நோபிள் TIN
88. ரூபி ஜாண்ஸன் TIN
89. ரூத் ஜாண்ஸன் TIN
90. சாரா பாலசிங் MDU
91. சரோஜினி எலிசபெத் CHE
92. செல்வ அமுதா ஜார்ஜ் CHE
93. செல்வ பென்சி ஆபேல் KOT-AP
94. செல்வராணி ஆல்பர்ட் CHE
95. செல்வி அமிர்தராஜ் TVR
96. ஷாலி எடிசன் CHE
97. ஷீபா சாம்ஸன் CHE
98. சவுந்தரம் சாலமோன் CHE
99. ஸ்டெல்லா கனகராஜ் CHE
100. சுகிர்தா ஆல்வின் CHE
101. சுகிர்தா சின்னதுரை TIN
102. சுஜாதா சாமுவேல் CHE
103. சுமித்ரா B. CHE
104. சுசீலா தியோடர் TCY
105. சுவர்ணலாதா அற்புதராஜ் KAR-CHE
106. தாரா மாணிக்கம் CHE
107. வனஜா ஹெர்பர்ட் TIN
108. வசந்தா அன்பன் TIN
109. வசந்தி கருணாகரன் CHE
110. வசந்தி வாசன் CHE
111. விஜயராணி CHE
112. விஜி டேனியல் CHE
113. வெஸ்லி சாமுவேல் TUT

## 2. இரண்டாம் பரிசு பெறுபவர்கள்:

**[11 போட்டிகளில் (11 மாதங்கள் மட்டும்) சரியான விடையெழுதியவர்கள்]**

1. ஏஞ்சல் C. CHE
2. பியூலா அலெக்ஸ் CHE
3. தேவமணி ஆபிரகாம் TUT
4. டோராபாய் CHE
5. ஞானம் பிலிப் CBE
6. ஞானசெல்வி மோசஸ் CHE
7. ஹெப்சிபா மங்களராஜ் TIN
8. ஜேன்ஸ் ANA-CBE
9. ஜெபக்குட்டி மோசஸ் TIN
10. ஜெஸி ஜெயக்குமார் TIN
11. ஜூலியட் CHE
12. கஸ்தூரி எலியாஸ் TIN
13. லதா மைக்கேல்ராஜ் CHE
14. மரியாள் ஜே.எஸ் TUT
15. மெஜிலா ஜாஷ்வா TUT
16. பமீலா எட்வின் KAN
17. பிரிஸ்கில்லாள் சசி CBE
18. ரத்னாவதி பாண்டியன் CHE
19. செல்வராணி G. CHE
20. சாந்தி ஆல்பர்ட் PCM-TEN
21. சாந்தி ஜெபக்கனி KAL-AP
22. சாந்தி ரோஸ் CBE
23. ஷர்மீளா செல்வராஜ் DR. CUD
24. ஸ்டெல்லா டேவிட் TUT
25. வைலட் சைரஸ் CHE

## 3. மூன்றாம் பரிசு பெறுபவர்கள்:

**[10 போட்டிகளில் (10 மாதங்கள் மட்டும்) சரியான விடையெழுதியவர்கள்]**

1. அமிர்தகனி பொன்ராஜ் CHE
2. சிட்டி TR. TVR
3. கிறிஸ்டி ஆயிட்டஸ் MKM-TIN
4. டேனியல் தாமஸ் TIN
5. எவாஞ்சலின் கிப்ஸன் MSK-TIN
6. கிரேஸ்லின் சாந்தி TIN
7. ஜெயக்குமாரி CBE
8. ஜெமி ஜாய் பிளஸ்ஸி TIN
9. மல்லிகா ஜாய்ஸ் TCY
10. மரிய பாப்பா CHE
11. மேபல் கிறிஸ்டியான் CHE
12. பால் தங்கம் CHE
13. பிரிசில்லா தாஸ் CHE
14. ஷீலா சாமுவேல் CUD
15. ஸ்டெல்லா சூசையா TUT
16. தெல்மா ஸ்டேன்லி MDU
17. வைலட் கிறிஸ்டோபர் TIN
18. வினோலியா ஜேம்ஸ் KOV-TUT

போட்டியாளர்களின் கவனத்திற்கு: பரிசுகள் ஜுன்-மாத இறுதிக்குள் வழங்கப்படும். இப்பரிசுகள் 2022-காலண்டர் ஆண்டுக்கானவை என்பதையும், 2023ம் ஆண்டுக்கான பரிசுகள் அடுத்த ஆண்டு (2024) வழங்கப்படும் என்பதையும் போட்டியாளர்கள் நினைவில் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

ஆசிரியர் இயக்குநர்

# BETHEL BIBLE COLLEGE

A Ministry of Gospel Mission of India (GMI)

(Affiliated to the Senate of Serampore College [University])

4th Lane, Seethamma Colony, Pattabhipuram Post, Guntur - 522006, Andhra Pradesh, India

Invites applications from committed and qualified men and women of any Christian denomination for the following degree courses in English under the Senate of Serampore College [University] system, commencing from June 2023

**5 YEARS B.D.**

Bachelor of Divinity

Eligibility

Intermediate pass

**4 YEARS B.D.**

Bachelor of Divinity

Eligibility

Graduation from any recognized University

D.C.S. (with Intermediate /+2 Pass) & 2 Qualifying papers pass

Mature Candidate with Mature Candidate Entrance Examination pass

**2 YEARS B.D.**

Bachelor of Divinity

Eligibility

B.Th. /B.Miss. / B.C.S. / Qualifying examination of the Senate of Serampore College [University]

Candidates willing to apply for any of the above BD degree courses can obtain application & prospectus from the Principal's office on payment of Rs 100/ (Rupees one hundred only) by MO/ DD/ Cheque. DD/ Cheque can be drawn in favor of "Bethel Bible College", payable at Guntur, Andhra Pradesh.

**The duly filled-in application form with required supportive documents should reach the Principal's office on/before 30, April, 2023**

Scan this QR code to download application

0863 226 2832 www.bethelbiblecollege.edu.in bbcguntur@yahoo.co.in https://www.facebook.com/bbcgunturap

வேத ஆராய்ச்சி - 72



Rev. Dr. D. சுரேஷ் ராஜன்

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

Author: Rev. Dr. D. Suresh Rajan

**சங்கீதம் – 72**

**Episode - 72**

முன்னுரை:-

இச்சங்கீதமானது சாலோமோன் மன்னரின் முடிசூட்டுவிழாவில் (Coronation) பாடப்பட்ட பாடலாக இருக்கலாம் என வேதபண்டிதர்கள் கருதுகின்றனர். இந்தப் பாடல், ஆட்சிப்பொறுப் பில் இருக்கும் ஒருவர் எப்படி நடந்துகொள்ளவேண்டும் எனற நடத்தை விதிகளின் அடிப் படைக் கருத்தை உள்ளடக்கியதாகும். மேலும், தாவீதின் குமாரனாகிய சாலோமோனைக் கடந்து, தாவீதின் வம்சத்தில் உதித்த தேவகுமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவைக் குறித்த தீர்க்கத்தரிசனமாகவும் இது அமைந்துள்ளது. இச்சங்கீதத்தை ‘இராஜ சங்கீதம்’ (Royal Psalm) எனவும் அழைக்கின்றனர். இச்சங்கீதத்தின் இறுதி வரியில், ‘ஈசாயின் புத்திரனாகிய தாவீதின் விண்ணப்பங்கள் முடிந்தது’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளதைக் கருத்திற்கொண்டு, அவரது விண்ணப்பங்கள் என்னென்ன? என்பதை சற்றுநேரம் இங்கு நாம் தியானிப்போம்.

1. நீதி, நியாயம் செய்யப்படவேண்டும்:-

இந்நாட்களில் உலக அளவில் சமூகத்திலும், ஊடகங்களிலும், திருச்சபையிலும் நீதி, நியாயம் ஆகிய சொற்றொடர்கள் அதிகமாகப் பயன்பட்டுவருகின்றன. தாவீது பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே ஆட்சிப்பொறுப்பில் உள்ள வர்களுக்கு இருக்கவேண்டிய அடிப்படைக் குணாதிசயமாக இதைக் குறிப்பிடு வதை நாம் இங்கு காண்கிறோம் (வச-1, 2). கடவுள் நம் ஒவ்வொருவரையும் வித்தியாசமான பொறுப்பிலும் அதிகாரத்திலும் வைத்திருக்கிறார். குடும்பத் தலைவர்களாக, குடும்பத் தலைவிகளாக, பணித்தளங்களில் மேலாளர்களாக, திருச்சபையில் நிர்வாகிகளாக பல்வேறு தலைமைத்துவப் பொறுப்புகள் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய சூழ்நிலைகளில் நாம் எவ்வாறு நடந்து கொள்கிறோம்? இறையியல் கற்ற போதகர்களில் சிலர், தலித்-மக்களின் நல் வாழ்வுக்காக உழைக்கவேண்டும், அவர்களுக்கு நீதி, நியாயம் வழங்கப்பட வேண்டும் என வானதிர முழங்கிக்கொண்டே, தாங்கள் பணியாற்றும் திருச்சபை களில் அற்ப பணத்துக்கு ஆசைப்பட்டு அநீதிக்குக் கைக்கூலியாவதை இந்நாட்க ளில் நாம் தாராளமாகப் பார்க்க முடிகிறது. ஆனால் தாவீதோ, தன் சந்ததியில் ஆட்சிப்பொறுப்பில் இருப்போர் நீதி நியாயத்தை தவறாமல் நிலைநாட்டவேண்டும் என விண்ணப்பமாக இங்கு கூறுகிறார்.

அன்பானவர்களே! நீங்கள் அரசாங்கப் பணியிலிருந்தாலும், திருச்சபையில் பொறுப்பில் இருந்தாலும், வியாபாரம் அல்லது தொழில்துறையில ஒரு நிர்வாகத்தில் இருந்தாலும்,

நியாயமும் உள்ளவர்களாக விளங்கும்படி இறைவனிடம் மன்றாடி நல்ல தீர்மானங்களை எடுக்க அழைக்கப்படுகிறீர்கள்.

2. அநீதி அகற்றப்படவேண்டும்:

தாவீது அரசர் தன் வழித்தோன்றல்களின் ஆளுமையில், 'இடுக்கண் செய்கிறவரை நொறுக்கு வார்' (வச-4, 6), 'அவருடைய சத்துருக்கள் மண்ணை நக்குவார்கள்' (வச-9, 6) என்று குறிப் பிடுகிறார். குறிப்பிட்ட தனிநபர்களைக் பற்றி இது சொல்லப் பட்டது என நாம் இதை எடுத்துக் கொள்ளக்கூடாது. அநீதி செய்பவர்கள் அறவே அகற்றப்படவேண்டும் என்பதே தாவீதின் விண்ணப்பமாய் இருந்தது.

பிரியமானவர்களே! சிலுவைக்கு முன்னான காலங்களில் வாழ்ந்த தாவீது, தனது ஆளுகைக்குட்பட்டவர்கள் நீதி, நேர்மையுடன் வாழவேண்டும் மட்டுமல்லாமல் அவர்க ளுக்கும் நீதி நியாயம் கிடைக்கவேண்டும் என்று விரும்புகிறதை நாம் காண்கிறோம். சிலுவைக்குப் பின்னான கிருபையின் காலத்தில் வாழ்கிறவர் களான நாம், அநீதி அறவே ஒழிக்கப்படவேண்டும் என்பதில் அக்கறை உள்ளவர் களாக இருக்கிறோமா? நமது அற்ப-சொற்ப நன்மைகளுக்காக நாம் நிர்விசார மாய் இருந்துவிடாமல், நீதி-நியாயம் தழைத்தோங்கும்படிக்கு அநீதியை அடியோட ஒழித்துக்கட்ட ஆண்டவரின் சந்நிதியில் சூளுரைத்து செயல்படுவோம்.

3. நீதிமான்கள் கனப்படுத்தப்படவேண்டும்:-

''அவருடைய நாட்களில் நீதிமான் செழிப்பான், சந்திரனுள்ளவரைக்கும் மிகுந்த சமாதானம் இருக்கும்'' (வச-7). நம் சமுதாயத்தில் நல்லவர்கள் கனப்படுத்தப் படுவதில்லை. துன்மார்க்க ருக்கும் கொள்ளைக்காரருக்கும் திருச்சபை மற்றும் சங்கங்களில் கொடுக்கப்படும் அந்தஸ்து நல்லவர்களுக்குக் கிடைப்பதில்லை. இது, மிகவும் வேதனையளிப்பதாயிருந்தாலும், அதுவே நிதரிசனமான உண்மை. அன்பானவர்களே! ஆண்டவரின் பிள்ளைகளாகிய நாம் நீதிமான்களை அடையா ளங்கண்டு, சமுதாயத்தில் அவர்களை அடையாளப்படுத்தி, அவர்களைக் கனப்படுத்த, உயர்த்த அழைக்கப்படுகிறோம்.

முடிவுரை:-

இந்த சங்கீதம் தாவீது அரசரால் அவரது குமாரன் சாலோமோனுக்கும் மட்டுமல்ல ஈசாயின் மைந்தனாய் இவ்வுலகில் தோன்றிய இயேசு கிறிஸ்வுக்கும் தீர்க்கத்தரிசன மான சங்கீதமாய் இருந்தாலும் நம் அனைவருக்குமே பொருந்துவதாக அமைந் துள்ளது. ''நீங்களோ, தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும் இராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும் இருக்கிறீர்கள்'' (1பேது2:9). தேவனுக்கு முன்பாக எங்களை இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர் நாங்கள் பூமியில் அரசா ளுவோம்'' (வெளி-5:10) என்ற திருவசனங்களின்படி ஆண்டவர் நம்மனைவரையும் இராஜாக்களாகவே நியமித்திருக்கிறார். எனவே நாம் நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டுபவர்களாக, அநீதியை வேரறுக்கிறவர்களாக விளங்க அழைக்கப்படு கிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்...

AUTHOR: REV. DR. D. SURESH RAJAN, CO-FOUNDER, BIBLE TRANSLATION INITIATIVES, COIMBATORE, SOUTH INDIA
ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன்,
இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

# வேதாகம போட்டி-150 சரியான பதில் அளித்தோர்

1) அமலியா லோகநாதன் TVM
2) அமிர்தகனி பொன்ராஜ் CHE
3) அன்பு சுதந்திரம் TIN
4) ஏஞ்சல் சி. TIN
5) ஏஞ்சல் ராஜதுரை CHE
6) ஏஞ்சலின் பிரியா ஏ. TIN
7) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் CHE
8) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
9) அன்னாள் ஜெபக்கனி CBE
10) அனி பாய் ஜாண் TIN
11) அனிதா மோகன்ராஜ் ERO
12) அரோமா சாத்ராக் TIN
13) ஆர்தர் மாசில்லாமணி CHE
14) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
15) பெல்சி தங்கராஜ் CHE
16) பெனிட்டா பிராங்க்ளின் CHE
17) பியூலா அலெக்ஸ் CHE
18) பியூலா ஜேசுராஜன் PON
19) செலினா பென்சி வில்சன் DR, KUW
20) சந்திராபாய் மாசிலாமணி AVD
21) சந்திரலேகா KAL-AP
22) சந்திரா சாமுவேல் TIN
23) சார்லஸ் ஃபின்னி DR, CHE
24) சார்லஸ் சாலோமோன் WG-CMR SHI
25) சார்லட் டேவிட் CHE
26) செல்லம் சங்கீதா TIN
27) சித்ரா பெஞ்சமின் TVL
28) சிட்டி TR. TVL
29) கிறிஸ்டல் ஜாய் யோபு TPT
30) கிறிஸ்துதாஸ் GOP
31) கிறிஸ்டி ஆயிட்டஸ் MAR-TIN
32) கிறிஸ்டி ஞானராஜ் CHE
33) கிறிஸ்டி ஜேம்ஸ் SIR
34) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
35) டெய்ஸி ஜெபதாஸ் TCY
36) டெய்ஸி சாம் TUT
37) டேனியல் தாமஸ் TIN
38) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
39) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
40) டெல்பி பாத்திமா CHE
41) தேவமணி ஆபிரகாம் TUT
42) தேவநேசம் ராஜாசிங் CHE
43) டோராபாய் CHE
44) எலிசபெத் செல்லத்துரை CHE
45) எமிலி லில்லி ஜாய்ஸ் CHE 42) எமிமாள் JOL
46) எஸ்தர் D.R. TIN
47) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
48) குளோரி ரவீந்திரன் TIN
49) ஞானஜோதி பேரின்பம் VIR
50) ஞானம் ஜெபராஜ் TIN
51) ஞானம் பிலிப் CHE
52) ஞானராணி PAN TVL
530) கோல்டா ஜேசுபாதம் MUM
54) கிரேஸ் டேனி TEN
55) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
56) கிரேஸ் பிரின்ஸ் APM-TEN
57) கிரேஸ்லின் சாந்தி TIN
58) கிரேஸி கிறிஸ்டோபர் CHE
59) கிரேஸியா ஜெயபால் CHE
60) கிரிசெல்டா செய்லர் CHE
61) குணவதி ஜெபமணி CHE
62) ஹெலன் ஜான்சிராணி TIN
63) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
64) ஹெலன் திலக் TUT
65) ஹேமா அஜீத் CHE
66) ஹேமா கேப்ரியேல் BAN
67) ஹெப்சி அசரியா PON
68) ஹெப்சிபா மங்களராஜ் TIN
69) ஹிம்லா ராஜகுமாரி CHE
70) இளவரசி ஜோபிதா CBE
71) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
72) இந்திரா கெத்ஸி டேவிட் TIN
73) ஜமீலா செல்வராஜ் CHE
74) ஜேன்ஸ் (ஜான்ஸி) ANI
75) ஜேன் தர்மராஜ் TIN
76) ஜான்ஸி சந்தியா MKM
77) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
78) ஜெபக்குட்டி மோசஸ் TIN
79) ஜெபசீலி கிளின்டன் CHE
80) ஜெபாஸ்டின் G. KAN-TIN
81) ஜெபா சீனி MKM
82) ஜெமி ஜாய் பிளஸ்ஸி TIN
83) ஜெமீலா நிக்ஸன் CHE
84) ஜெனித்தா செல்வின் TIN
85) ஜெனித்தா ஷெரூபா ஞானவேல் DHA
86) ஜெனிட்டா ஹெலன் CBE
87) ஜெரின் ஸ்டீபன் CHE
88) ஜெஸி செல்லதுரை CBE
89) ஜெஸி ஜெயக்குமார் TIN
90) ஜெயா ஆல்பர்ட் KUM
91) ஜோனா ஸ்டீபன் AVD
92) ஜோஸ்பின் ஜெஸி CHE
93) ஜாய்ஸ் பாண்டியன் CHE
94) ஜூலியட் CHE

வேதாகம போட்டி-150 சரியான பதில் அளித்தோர் பட்டியலின் தொடர்ச்சி

95) ஜூலியட் ஜெயக்குமார் TIN
96) கலா கிருபாகரன் TIN
97) கலையரசி செல்வராஜ் CHE
98) கஸ்தூரி எலியாஸ் TIN
99) கிங்ஸ்லி ரவிக்குமார் CHE
100) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
101) லதா மைக்கேல்ராஜ் CHE
102) லீலா டேவிட் CHE
103) லீலா ஜோஸப் CBE
104) லில்லி ஜாண்ஸன் CHE
105) லில்லி புஷ்பம் ஷைனி CHE
106) லிஸி டென்சிங் TIN
107) மேபல் கிறிஸ்டியான் CHE
108) மல்லிகா V. CHE
109) மல்லிகா ஜாய்ஸ் TCY
110) மணிமேகலை ஜெயக்குமார் TIN
111) மனோகரம் தனராஜ் NAZ
112) மரிய பாப்பா CHE
113) மரியாள் ஜே.எஸ். TUT
114) மெஜிலா ஜோஷ்வா TUT
115) மெர்சிபா CBE
116) மெர்சி தனராஜ் CBE
117) மெர்சி ஃபுளோரா பாஸ்கர் VEL
118) மெரிட்டா ஜெயபாலன் TCY
119) மியூரியல் புஷ்பராஜ் CHE
120) நகோமி நிர்மலா CHE
121) நதியா லாரன்ஸ் TVR
122) நிக்ஸன் எவர்பிரைட் TIN
123) ஆலிவ் ஜெயபாலன் CBE
124) பாக்யபாய் ஆரோன் TIN
125) பமீலா எட்வின் KAN
126) பெர்சி பால் பொன்சிங் SAW
127) பிங்க்லின் தேவமலர் CHE
128) பொன்மணி உத்தமசிங் NAZ
129) பிரேமா பூபாலன் AVD
130) பிரேமா ஜானி PCM
131) பிரேமா ஸ்டாலின் CHE
132) பிரின்ஸ் தயாநிதி CHE
133) பிரின்ஸ்லின் ஷைனி APM-TEN
134) பிரிசில்லா தாஸ் CHE
135) பிரிஸ்கில்லாள் சசி CBE
136) பிரியா ராஜ்குமார் CHE
137) ராஜபிரமீளா TPT
138) ரேச்சல் கனகராஜ் CBE
139) ராணி ஃபுளோரா APM-TEN
140) ராஜ்மேரி சார்லஸ் KER
141) ரமோலா அதிசயராஜ் TIN
142) ராணி பிரபாகரன் TIN
143) ராணி சாமுவேல்ராஜ் CHE
144) ரத்னா டென்னிஸன் CBE
145) ரத்னாவதி பாண்டியன் CHE
146) ரெஜினா விக்டர் TIN
147) ரோஸ்லின் மார்கிரெட் CHE
148) ரோஸி ஸ்டீபன் CHE
149) ரூபவதி நோபிள் TIN
150) ரூத் ஜாண்ஸன் TIN
151) சலோமி மனோகர் DR. CHE
152) சம்பு ஜெயசந்திரன் MDU
153) சாரா பாலசிங் MDU
154) சரோஜினி எலிசபெத் CHE
155) செல்சி ஒதேன்யேல் ALA-TEN
156) செல்வ அமுதா ஜார்ஜ் CHE
157) செல்வ பென்ஸி ஆபேல் KOT-AP
158) செல்வராஜ் K CBE
159) செல்வராணி ஆல்பர்ட் CHE
160) செல்வராணி G CHE
161) செல்வி அமிர்தராஜ் TVR
162) ஷாலி எடிசன் CHE
163) சாந்தி ஆசேர் TIN
164) சாந்தி ஆல்பர்ட் PCT
165) சாந்தி ஜெயசீலன் CHE
166) சாந்தி ரோஸ் CBE
167) ஷீபா சாம்ஸன் CHE
168) ஷெரீன் ஜெபராஜ் PAN
169) சவுந்தரம் சாலமோன் CHE
170) சவுந்தரி பிரபாகரன் TVR
171) ஸ்டெல்லா டேவிட் TUT
172) ஸ்டெல்லா கனகராஜ் CHE
173) சுகிர்தா ஆல்வின் CHE
174) சுகிர்தா சின்னதுரை TIN
175) சுஜாதா சாமுவேல் CHE
176) சுமித்ரா B. CHE
177) சுசீலா தியோடர் TCY
178) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
179) தனசீலி ஞானராஜ் CHE
180) தாரா மாணிக்கம் CHE
181) தெல்மா ஸ்டேன்லி MDU
182) வனஜா ஹெர்பர்ட் TIN
183) வசந்தா அன்பன் TIN
184) வசந்தா சந்திரசேகர் CBE
185) வசந்தி கருணாகரன் CHE
186) வசந்தி வாசன் CHE
187) விஜி டேனியல் CHE
188) விமலா ஜெயக்குமார் TUT
189) விமலா P. CBE
190) விண்ணரசி ரோஸ் CHE
191) வினோலியா ஜேம்ஸ் KOV
192) வினோலியா வில்சன் VAN
193) வைலட் கிறிஸ்டோபர் TIN
194) வைலட் சைரஸ் CHE
195) வெஸ்லி சாமுவேல் TUT

# PRAYER-WINDOW  PRAYER-WINDOW

## ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

### ஜெப–ஜன்னல் ஜெப நேரங்கள் ஏப்ரல் – 2023

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள்: 12–05–2023 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5முதல் 6மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள்: 19–05–2023 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1முதல் 2மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள்: 26–05–2023 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8முதல் 10மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப–ஜன்னல் ஜெப–நேரங்களில் தானி–6:10 வசனத்தின்படி **"தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க"** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப–ஜன்னல் ஜெப–வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் உங்களை வேண்டிக்கொள்கிறோம்.

# பெந்தெகொஸ்தே – 2023 – PENTECOST

## 28th May 2023 Pentecost Sunday – பெந்தெகொஸ்தே ஞாயிறு மே, 28 2023

'பெந்தெகொஸ்தே' என்பது ஒரு கிறிஸ்தவ பண்டிகை நாளாகும். கிறிஸ்து உயிர்த்தெழுந்தபின் 40ம் நாளில் பரலோகத் திற்கு ஏறிச்சென்ற நாள் 'பரமேறுதல் திருநாள்' அல்லது 'விண்ணேற்றத் திருநாள்' (Ascension day) ஆகும். அதன் பின் 10நாட்களில் (ஈஸ்டருக்குப் பின் 50ம் நாளில்) தமது விண்ணேற்றத்தின்போது இயேசு கூறியபடி, அவர் பரிசுத்த ஆவியானவரை அனுப்பிய நாள் அல்லது 120சீடர் மீது பரிசுத்த ஆவி இறங்கிய நாள் 'பெந்தெகொஸ்தே திருநாள்' ஆகும். 50வது நாளானது ஈஸ்டருக்குப்பின் ஏழாவது ஞாயிறு அன்று வருவதால் 'பெந்தெகொஸ்தே ஞாயிறு' (Pentecost Sunday) என பெயர் பெற்றது. கிறிஸ்தவ விசுவாசத்தில் 'பெந்தெகொஸ்தே' என்பது பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெறுதல், புதுப்பித்தல் மற்றும் பிரதிபலித்தல் ஆகும். அப்போஸ்தலர் மற்றும் லூக்கா நூல்களில், இயேசுவின் சீடர்கள் எவ்வாறு பரிசுத்த ஆவியானவரை அனுபவித்தார்கள் என்பது விவரிக்கப்பட்டுள்ளது. முதல் கிறிஸ்தவ திருமுழுக்கு நடைபெற்ற நாளாக இந்நாள் கருதப்படுவதால் இது 'கிறிஸ்தவ திருச்சபையின் ஸ்தாபக-நாள்' எனவும் அழைக்கப்படுகிறது.

இந்த நிகழ்வு இயேசுவானவர், சீடர்மீது தம் ஆவியை அனுப்பும் வாக்குறுதியை நிறைவேற்றியது. ''யோவான் தண்ணீ ரில் ஞானஸ்நானம் கொடுத்தார், நீங்கள் பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் பெறுவீர்கள், விரைவில் பரிசுத்த ஆவியானவர் உங்களிடம் வருவார். நீங்கள் எருசலேமிலும், யூதேயா, சமாரியா மற்றும் உலகம் முழுவதிலும் என் சாட்சிகளாக இருப்பீர்கள்.'' என்பது இதுகுறித்து இயேசு பேசிய கடைசி வார்த்தைகள் ஆகும் (அப்.1:5-8). உலகில் உள்ள ஒவ்வொரு விசுவாசிகளுடனும் பிரசன்னமாக இருக்க, இயேசு, தனது சரீரத்திலிருந்து விடுவிக்கப்படுவது அவசியமானது என்பதை சீடருக்கு உணர்த்தும் வகையில், ''நான் போய் பரிசுத்த ஆவியானவரை உங்களிடம் அனுப்புவேன்.'' (யோவா-16:7) என்று சொன்ன இயேசு, பெந்தெகொஸ்தே நாளில் என்ன நடக்கும் என்பதையும், ''நான் பிதாவை வேண்டிக்கொள்வேன், அவர் என்றென்றைக்கும் உங்களுடனே இருக்கும்படி, சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை உங்களுக்குத் அனுப்புவார். உலகம் அவரை அறியவில்லை: ஆனால் நீங்கள் அவரை அறிவீர்கள்; ஏனெனில் அவர் உங்களுடனே வாசமாயிருக்கிறார். (யோவா 14:15-23) என முன்னறிவித்துள்ளார்.

# வேதாகம போட்டி-151

வேதபகுதி
எசேக்கியேல்
முழுவதும்

ஓரிரு வார்த்தைகளில் பதிலளிக்கவேண்டும்

பதில்களுடன் வேதவசன இருப்பிடம் எழுதவேண்டும்

பதிலளிக்க
கடைசி நாள்
மே-25

1. ‘விசித்திரமாய் செய்யப்பட்ட முத்திரை மோதிரம்’ - இது யாரைக்குறித்து சொல்லப்பட்டது?
2. நகரின் நடுவிலிருந்தெழும்பி நகரின் கிழக்கிலுள்ள மலையில் போய் நின்றது எது?
3. ‘இந்த தேதியில்தான் பாபிலோன்ராஜா எருசலேமில் பாளயமிறங்கினான்’ - எந்த தேதி?
4. பறவைகள்-மிருகங்களில் தானாய் செத்ததும், பீறுண்டதுமானதை யார் புசிக்கலாகாது?
5. இஸ்ரவேல் கோத்திரங்களின் நாமங்களின்படியே பெயர் பெறக்கடவது - இவை யாவை?
6. இரண்டு வழிகளின் முனையாகிய வழிப்பிரிவில் நிமித்தம் பார்க்க யார் நிற்பான்?
7. ‘தானியேலைப் பார்க்கிலும் நீ ஞானவான்’ - இது யாரைக்குறித்து சொல்லப்பட்டது?
8. எசேக்கியேலுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டானது எந்த நதியண்டையில்?
9. ‘சேக்கலானது இருபது கேரா’ - சரியா தவறா?
10. ‘பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்’ - சரியா தவறா?
11. ‘என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன் நீங்கள் அனலடைவீர்கள்’ - சரியா தவறா?
12. ‘நான் எருசலேமிலே அப்பம் என்னும் திறவுகோலை முறிக்கிறேன்’ - சரியா தவறா?
13. ‘இது’ வருகிறது, அப்பொழுது சமாதானத்தைத் தேடுவார்கள் அது கிடையாது:
அ) பெருவெள்ளம் ஆ) கொள்ளைநோய் இ) காரிருள் ஈ) சங்காரம்
14. தீருவிலிருந்த ‘இவர்கள்’ அதற்கு மாலுமிகளாய் இருந்தார்கள்:
அ) தளபதிகள் ஆ) மூப்பர்கள் இ) சாஸ்திரிகள் ஈ) பிரபுக்கள்
15. நீதிமான் தன் நீதியைவிட்டு திரும்பி ‘இதை’ செய்தால் அவன் அதினால் சாவான்: அ) தூஷணம் ஆ) அநியாயம் இ) பரிகாரம் ஈ) அதிகாரம்
16. இஸ்ரவேலின் தீர்க்கத்தரிசிகள் ‘இங்குள்ள’ நரிகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்:
அ) வனாந்தரங்களில் ஆ) மலைகளில் இ) மண்மேடுகளில் ஈ) குழிகளில்
17. ஓட்டை சுவரில் இருந்தது! ஓட்டை விரிந்து போனதும், வாசல் ஒன்று இருந்தது! வாசல் உள்ளே சென்றதும், தூரக்காட்சி விரிந்தது! உள்ளே என்ன இருந்தது?
18. வலப்புறம் அக்கா ஃபேமிலி! இடப்புறம் தங்கை ஃபேமிலி! நடுவில் இவள் ஃபேமிலி! அக்காவிலும் இவள் அடாவடி! தங்கையிலும் இவள் தடாலடி!
அக்கா பெயர் சமாரியா. தங்கை பெயர் சோதோம். இவள் பெயர் என்ன?
19. நாற்புறத்திலும் மூணு-மூணு, இவை நா-மூணு பன்னிரண்டு! நகரைச் சுற்றிலும் இவை பன்னிரண்டு! கோத்திரம்படி பன்னிரண்டு! சூத்திரம்படி பன்னிரண்டு! இவை என்ன?
20. செங்கல்லில் மேப்-டிராயிங் (map-drawing)! கோட்டை, கொத்தளம், பீரங்கி !
சட்டியில் எஃகு-கோட்டை (iorn-forte)! படை, பாளையம்! என்ன மேப்? என்ன கோட்டை?

## வேதாகம போட்டிக்கான பதில்களை அனுப்பவேண்டிய முகவரி

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

## ADDRESS FOR SENDING ANSWERS OF BIBLE CONTEST

Mrs. Jeyaseeli Dharmaraja, Flat: F-1, First floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93.
E-mail: ratchippu@hotmail.com/siddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463



சகோ. C. ஏஞ்சல்

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

THE ROOT OF DAVID HE RHIZA DAUID

## தாவீதின் வேரானவர்

EPISODE - 48 ஹே ரிஸா டாவித் பாகம் - 48

இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார். வெளி–5:5

Behold, the lion of the tribe of Juda, the root of David, has prevailed to open the book, and to loose the seven seals thereof. Rev-5:5

லிவியாதான் என்னும் கோணலான சர்ப்பத்தையே, கடிதும் பெரிதும் பலத்ததுமான தமது பட்டயத்தால் தண்டித்து சமுத்திரத்தில் இருக்கிற வலுசர்ப்பத்தைக் கொன்றுபோடுகிற இயேசுவின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளக்கு மே-மாத கிருபையின் வாழ்த்துக்கள்.

வெளி-22:16 இவைகளை உங்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்படி இயேசுவாகிய நான் என் தூதனை அனுப்பினேன். நான் தாவீதின் வேரும் சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாய் இருக்கிறேன். தாவீதின் வேராகிய இயேசுவை உலகெங்கும் அறிவிப்போம்.

ஏசா-27:6 யாக்கோபு வேர்பற்றி இஸ்ரவேல் பூத்து காய்த்து உலகத்தை நன்மை யால் நிரப்பும் நாட்கள் வரும். ஆம் பிரியமானவர்களே, நம் வாழ்வின் ஆணி வேராக தாவீதின் வேருமானவர் இருக்கும்படிக்கு அறிக்கை செய்வோம்.

ரோம-11:16-22 வேர் பரிசுத்தமானதாய் இருப்பதால் சுபாவ கிளைகள் தோன்றாது, அவிசுவாசம் எழும்பாது. தேவ-தயை வருவதால், அவருக்குள் நிலைத்து நிமிர்ந்து, பரலோகை பார்த்து நடக்கிற கிருபைகளை தேவன் பொழிந்தருள்வார்.

ரோம-15:12 ஈசாயின் வேராகிய ஒருவர் புறஜாதியாரை ஆளும்படிக்கு நம்மூலம் வெளிப்படுவார், புறஜாதிகளும் இரட்சிக்கப்படுவார்கள். அல்லேலூயா.

எரே-17:7, 8 நீர் ஒருவரே என் நம்பிக்கை என்ற வைராக்கிய விசுவாச-வேர் நம் இருதயத்தில் இருக்கும்போது, நம்மை அவர் தண்ணீரண்டை நாட்டப்பட்டவர் களாக. கால்வாய் வழியாய் தன் வேர்களை விடுகிறதும் மழைத்தாழ்ச்சியுள்ள வருஷத்திலும் வருத்தமின்றி தப்பாமல் கனிகொடுக்கிறதுமான மரத்தைப்போல் இருக்கும்படி ஆசீர்வதிப்பார்.

ஜெபம்: திராணியும் வல்லமையும் உள்ளவரே உம்மை துதிக்கிறோம். கல்மழை போல், சங்காரபுசல்போல், புரண்டுவருகிற பெருவெள்ளம்போல் ஓங்கிய புயத்தி னால் இருளின் அதிகாரத்தை பாதாளத்தில் தள்ளுபவரே, உம்மைத் துதிக்கிறோம். எங்களை உமது கரத்தில் விதைக்கிறோம். இந்த எழுப்புதலின் நாட்களில் நீதிமான் செழித்து லீபனோன்போல் வேரூன்றி நிற்கும்படி செய்வீராக. இயேசுவின் நாமத்தில், ஆமென் பிதாவே.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
**C. Angel**

தேன்துளி வேதவசனக் கதை–144*. . .

# மனரம்மியமே நித்திய மகிழ்ச்சி


சகோ. அசரியா

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A. M.Ed.

அடர்ந்த காட்டில் தாழ்வு மனப்பான்மை கொண்ட யானை ஒன்று வாழ்ந்து வந்தது. அந்த யானை எப்பொழுதும் காட்டிலுள்ள மற்ற உயிரினங்களோடு தன்னை ஒப்பிட்டு, மனச்சோர்வு அடைந்து, கவலையில் வாடி, கண்ணீர் வடிக்கும். ஒரு குருவி பறப்பதை பார்த்தால் போதும் உடனே, தனக்கு சிறகுகள் இல்லை, ஆகாயத்தில் பறக்கவும் முடியவில்லை என ஏங்கித் தவிக்கும். ஒரு 'நைட்டிங்கேல்' பாடுவதைக் கேட்டால் போதும், உடனே தனக்கு இந்த இனிமையான குரல் இல்லையே என புலம்பும். வண்ணத்துப் பூச்சியை பார்த்தவுடன், நமக்கு இதற்கு இனிமையான தேன் உணவாகக் கிடைக்கிறது. நுமக்கோ சுவையற்ற மரங்களும் இலைகளும்தான் கிடைக்கிறது என சலித்துக் கொள்ளும். மட்டுமல்ல, மான்களைப் பார்த்துவிட்டால் போதும் உடனே, எனக்கு மான்போன்ற அழகு இல்லை வேகமாக ஓட மெல்லிய கால்களும் இல்லை, நான் வாழ்வதே வீண் என அழுது கண்ணீர் வடிக்கும். எறும்புகளை பார்த்துவிட்டால் போதும் உடனே தன்னால் எறும்புகளைப் போல் பூமிக்கடியில் சென்றுவர முடியவில்லையே என வாடி வருந்தும்.

இத்தகைய தாழ்வு மனப்பான்மை காரணமாக அந்த யானை பெலவீனம் அடைந்து, உடல்-மெலிந்து படுத்த படுக்கையாகிவிட்டது. இதைக்கண்ட யானைகளும் மற்ற விலங்குகளும் அந்த யானையிடம் வந்து, 'யானையாரே, உங்கள் குறைகளை எண்ணி சோர்ந்துபோகாமல் நிறைகளை எண்ணி மகிழ்ச்சியோடிருங்கள் எனக் கூறின. உங்களுடைய தந்தம் விலையே றப்பெற்றது. நீங்கள் மனிதர்களுக்கு மிக உதவியாக இருக்கிறீர்கள், அதனால்தான், யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன், என பழமொழி கூட இருக்கிறது' எனக்கூறி ஆறுதல்படுத்தின. இதைக்கேட்ட அந்த யானை, கர்த்தர் தனக்கு தந்த மேன்மை களை எண்ணிப்பார்த்து மகிழ்ந்தது. பின்னர் உடல் நிலை தேறி எழுந்து நடந்தது.

நம் வாழ்வில்கூட ஆண்டவர் நமக்கு உயர்கல்வி, பொருளாதார வசதி என பல மேன்மை களை அருளி நம்மை உயர்த்தியிருக்கிறார். ஆனால் நாம், நம்மை பிறருடன் ஒப்பிட்டு, நமக்கு அது இல்லையே, இது இல்லையே என வருந்துவதால் நமக்கு சோர்வும் கவலை யுமே எற்படும். ஆண்டவர் நமக்கு தீர்க்கத்தரிசனம் மற்றும் அந்நியபாஷை வரங்களை தர வில்லையே என கலங்கிக்கொண்டிராமல் கர்த்தர் நமக்கு அருளியுள்ள விசுவாசம், போதிக் கும் வரம், போன்றவற்றை எண்ணி மகிழ்ந்து அவற்றை விருத்தி செய்யும்போது அதற்கேற்ற ஆசீர்வாதங்களை ஆண்டவர் நமக்குத் தருவார். வேதம் இவ்விதம் சொல்லுகிறது:

**கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்கள் பெலன். நெகே 8:10**

**நான் கர்த்தருக்குள் மகிழுவேன். சங்–104:34**

**நீதிமானின் நம்பிக்கை மகிழ்ச்சியாகும். சங்–37:4**

EPISODE 10

# இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

## இரண்டாயிரம் ஆண்டு வரலாறு..
## இரண்டாம் வருகைக்கு தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்



**இந்திய திருச்சபை சரிதை:**
**(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)**
**தொகுதி-2 பகுதி-5**

தொகுதி-2 இடைக்கால கிறிஸ்தவர்கள் பகுதி-5 பிந்தைய இடைக்கால பயணிகள்

பிந்தைய இடைக்காலப் பயணிகளாக இந்தியாவுக்கு வருகை புரிந்தோரின் குறிப்புகளிலிருந்து இடைக்கால இந்திய கிறிஸ்தவர்களின் நிலை குறித்து இப்போது காண்போம்.

1. மார் சாலமோன்: (கி.பி.1222)

இவர் நெஸ்தோரிய பேராயர். தமது தேனீயின் நூல் (Book of the Bee) என்னும் புத்தகத்தில் தூய தோமா மரபு குறித்து குறிப்பிடுகிறார். 'தோமா யூதா இனத் தவர் எருசலேமைச் சார்ந்தவர். இவர் பாரசீகர்களுக்கும் மேதியருக்கும் இந்தியர் களுக்கும் போதனை செய்தார். இந்திய அரசனின் மகளுக்கு திருமுழுக்கு அளித்ததால் ஈட்டியால் குத்தப்பட்டு கொலையுண்டார். ஹப்பான் என்ற வணிகர் அவர் உடலை எடுத்து வந்து, ஆண்டவரின் ஆசிபெற்ற எடேசா நகரில் அடக்கம் செய்தார் என்றும், வேறு சிலரோ 'மஹலூப்' என்ற இந்திய நகரத்தில் அவரை அடக்கம் செய்ததாகக் கூறுவர்' என்றும் எழுதுகிறார். தூய தோமா புதைக்கப்பட்ட இடத்தின் பெயரை முதல் முறையாகக் குறிப்பிடுவது இவர்தான் (மார் சாலமோன்) என்பதால் அது கவனத்திற்குரியது.

2. மார்க்கோ போலோ: (கி.பி.1292)

இவர் இத்தாலியின் வெனிஸ் நகரிலிருந்து வந்த பயணி. தோமாவின் உடல் இந்தியாவில் மலபார் பகுதியிலுள்ள ஒரு நகரில் அடக்கம் செய்யப்பட்டுள்ள தாகவும் கி.பி.1292ல் கல்லறைக்குத் தாம் சென்றுவந்ததாகவும் குறிப்பிடுகிறார்.

3. மாண்டி கார்வினோ ஜான்: (கி.பி.1305)

இவர் ஒரு பிரான்சிஸ்கன் துறவி. சீனா செல்லும் வழியில் சில காலம் இந்தியாவில் தங்கி இருந்தார். கி.பி.1305 ஜனவரி எட்டாம் நாள் பீக்கிங்கிலிருந்து எழுதிய தமது மடலொன்றில்

இந்தியாவின் ‘திருத்தூதர் தூய தோமாவின் வழிபடுமனை’ என்று குறிப்பிடுகிறார்.

4. போர்டினோனின் ஒடோரிக்: (கி.பி.11324)

இவர் இந்தியாவில் தான் மேற்கொண்ட பயணக்குறிப்பை உத்தேசமாக கி.பி.1324ல் எழுதியுள்ளார். மிளகு விளையும் நாட்டில் கிறிஸ்தவர் இருக்கின்றனர் எனவும். அப்பகுதியை மினிபார் எனவும் குறிப்பிடுகின்றார். தோமாவின் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள இந்த பகுதியை ‘மோபார்’ (Mobar) எனத் தெரிவிக்கிறார்.

5. ஜான்டே மாரிக்னோலி: (கி.பி.1349)

இவர் கி.பி.1349ல் தூய தோமா கிறிஸ்தவர்கள் வாழ்ந்த பகுதிகளில் தாம் பயணம் செய்த குறிப்பினைத் தருகிறார் தோமா கிறிஸ்தவர்கள் மிளகுத்தோட்ட உரிமையாளர்கள் எனவும், இவர்கள் அப்பகுதி அரசர் மானியமாக அளித்த பொது இரும்புப் பட்டறையின் உடமையாளர்களாகவும் உள்ளனர் எனவும் எழுதியுள்ளார். தூய தோமா கட்டிய வழிபடுமனை உள்ள இடம் மோஅபார் (Moabar) எனக் கூறுகிறார்.

6. நிக்கொலோ டி காண்டி: (கி.பி.1430)

இவர் தோமாவின் கல்லறையை நேரில் பார்த்ததாகத் தெரிகிறது. தமது பயணக் குறிப்பில், தாம் வந்த வணிக-நகரம் மாலேபூர் (Malepur) எனக் குறிப்பிடுகிறார். இது வங்காள விரிகுடாவைத் தாண்டி இரண்டாவது வளைகுடாவில் உள்ளது. இங்கு தோமாவின் உடலை மிகுந்த மதிப்புடன் ஒரு அகன்ற அழகிய வழிபடு மனையினுள் புதைத்துள்ளனர். நெஸ்தோரியர் என்னும் எதிர் கோட்பாட்டினரும் அக்கல்லறையை வழிபடுகின்றனர். இக்கோட்பாட்டினர் ஆயிரமானோர் இந்நகரில் உள்ளனர். நம்மிடையே உள்ள யூதர்களைப் போலவே இந்த நெஸ்டோரியர்களும் இந்தியா முழுவதும் சிதறிக்கிடக்கின்றனர் எனக் கூறுகிறார்.

13, 14, மற்றும் 15ம் நூற்றாண்டுகளில் இந்தியாவிற்குப் பயணியராக வருகை புரிந்த ஐரோப்பியரில் சிலர், தாங்கள் தோமா கிறிஸ்தவர்களை கண்ட இடத்தைப் பல்வேறு பெயர்களில் குறிப்பிடுகின்றனர். எனினும் அவ்விடம் மிளகு விளையும் இடம் என்று குறிப்பிட்டதில் அனைவரும் ஒருமித்து உள்ளனர்.

பக்சுலோமட்டம், சங்கராபுரி, கள்ளி, களிக்காவு, கொய்க்கம், மாதேய்பூர், முட்டோடல், நெடும்பள்ளி, பனக்கமட்டம், கோதகளி என்னும் குடும்பங்களும், இன்னும் சிலவும் தூய தோமாவின் மூலம் மலபாரில் கிறிஸ்தவம் தழுவியவர்கள். இவர்கள் கி.பி. முதலாம் நூற்றாண்டில் தூய தோமாவினால்தான். கிறிஸ்தவராக்கப் பட்டதாக இப்பயணிகள் உறுதியாகக் கருதுகின்றனர்.

உலகின் வேறெந்த நாட்டினரும் தோமாவின் கல்லறை தம்மிடையே உண்டு என்றோ, தூய தோமாவே தம் நாட்டில் கிறிஸ்தவத்தை நிறுவியவர் என்றோ உரிமை கோருவதில்லை. இதனடிப்படையில் இந்தியாவில் கிறிஸ்தவத்தை நிறுவியவர் தூய தோமாவே என முடிவெடுக்கலாம்.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd.,
(Pope’s College Sawerpuram), Thiruvanmiyur, Chennai. South India

# ஜெப-ஜன்னல் ஜெபக்குறிப்புகள்

**கர்த்தரை நோக்கி மன்றாடி ஜெபிப்போம் - Come! Let us intercede to God**

1) அகில உலக சமாதானத்துக்காக... உக்ரைன்-ரஷ்யா போர் மற்றும் சூடான்-உள்நாட்டுப் போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் பொருளாதாரம் சீரடைய... பேரிடர்களிலிருந்து அனைத்துலக மக்களும் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்தியாவில் மதவாதம், வன்முறைவாதம், பிரிவினை வாதம் போன்றவை வேரறுக்கப்பட... சிறுபான்மை மக்களுக்கு எதிரான ஒடுக்குதல்கள் அகல... ஒன்றிய அரசு அனைத்து மக்களையும் பாரபட்சமின்றி நடத்த... பொருளா தாரம் சீரடைய... விலைவாசிகள் குறைய... நீதிமன்றங்களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... மக்கள் இன - மத - மொழி வேறுபாடின்றி வாழ... தமிழ்நாட்டில் விவசாயம், தொழில்கள், வியாபாரம் சிறக்க... மத-பிரிவினை வாதங்கள், வன் முறைவாதங்கள் கட்டுப்படுத்தப்பட...

4) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோ ருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) உயர் கல்வி பயின்று வரும் நம் பிள்ளைகள் கி∴ப்ட்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜாஷ்வா மேத்யூ, ஷெர்லி ஜூடியா, டிரிசியா லவ்ஸ்லி, ஜாய்ஸ் கிறிஸ்டினா, ஜோ∴ப்னா, ஜெனி பர், சிந்தியா பிரகாஷ் ஆகியோருக்கு செமஸ்டர்-இறுதித் தேர்வுகளில் நல்ல ரிசல்ட் கிடைக்க...

6) திரு. நெல்சன் (நகோமி), திரு. பால் நந்தகோபால், திருமதி. சுந்தரிபாய், திருமதி. ரூபவதி நோபிள், திரு. அப்பன் டேவிட், திருமதி. ஜரீன் வாக்கர், திருமதி. ∴பிளாரன்ஸ் ராஜமணி, திரு. பிலிப், திருமதி. ஞானரத்தினபாய் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

7) திரு. பி.ஹெச். ஜெயச்சந்திரன், திருமதி. வசந்தா அன்பன், திரு.டி. மனோகர், திருமதி. சுகிர்தா சின்னதுரை, திருமதி. மேரி தேவதாஸ், திருமதி. வனஜா ஹெர்பர்ட், திருமதி. ரூபி ஜாண்சன், திருமதி. மெர்சி தனராஜ், திருமதி. சார்லெட் டேவிட், திருமதி. ஜெஸி ஜெயக்குமார் ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

8) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி. ஹேமா காபிரியேல், திரு. கிறிஸ்துதாஸ், திருமதி. ரூபி போஸ்கோ, திரு. நிக்ஸன் எவர்பிரைட், செல்வி. ஷைனி, திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திரு. எஸ்.ஜே.பி. ராஜா, திரு. அசரியா ஞானதாஸ் ஆகியோருக்காக அவர்களது குடும்பங்களுக்காக...

9) திருமதி. ∴பிரீடா தங்கதுரை, திருமதி. பிரீத்தி சைமன், அருட்பணி. எஸ்தர் கிங்ஸ்லி ஆகியோரது சுகபிரசவத்துக்காக...

10) 12ம், 11ம், 10ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதியுள்ள மாணவர்கள் (நம் பிள்ளைகள்) சிறந்த மதிப்பெண்களுடன் தேர்ச்சி அடைய... அவர்களது உயர்-கல்வி முயற்சிகளுக்காக...

# ஜெப-ஜன்னல் நன்றி பலிகள்

**கர்த்தருக்கு நன்றி பலிகளைச் செலுத்துவோம் - Come! Let us thank God**

1) திருமதி. ஹனா டைடஸ் அவர்களை பிரசவத்தில் பாதுகாத்து, அருமையான ஆண் குழந்தையைக் கொடுத்த கர்த்தாதி கர்த்தருக்கு நன்றிபலிகளைச் செலுத்துவோம்...

# வேதாகம போட்டி-150 (புலம்பல்)

## சரியான விடைகள்

1. நம்முடைய வழிகளை புலம்பல்:-3:40
2. பரி. ஸ்த. கற்கள் புலம்பல்:-4:1
3. யூதா ஜனங்கள் புலம்பல்:-1:3
4. சீயோன் குமாரத்தியின் புலம்பல்:-2:13
5. ஏதோம் குமாரத்தி புலம்பல்:-4:21
6. மேகத்தால் மூடிக்கொண்டார் புல:-3:44
7. குழந்தைகளின் புலம்பல்:-4:4
8. சீயோ.குமா.பிரபுக்கள் புலம்பல்:-28:10
9. தவறு புலம்பல்:-4:10
10. சரி புலம்பல்:-2:5
11. சரி புலம்பல்:-3:27
12. சரி புலம்பல்:-3:22
13. அ - திராட்சபழத்தை புலம்பல்:-1:15
14. இ - நம்பிக்கையோடு புலம்பல்:-3:26
15. இ - மந்தாரத்தினால் புலம்பல்:-2:1
16. அ - பண்ணிகைக்கு புலம்பல்:-1:4
17. ஏதோம் குமாரத்தி புலம்பல்:-4:20-22
18. எருசலேம்-சீயோன் புலம்பல்:-28:10
19. நசரேயர் புலம்பல்:-4:2, 6-8
20. சீயோன் மலை புலம்பல்:-5:14-18

## CONTACT DETAILS AND BANK DETAILS OF OUR MINISTRIES

**CONTACT DETAILS OF OUR MINISTRIES:**

**CALL**: 9962924900/9789914464.

**WHATSAPP:** 9789914463/7871676100

**E-MAIL**: ratchippu@hotmail.com/ sjddharmaraja@gmail.com

**POSTALADDRESS:** REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93.

**WEBSITE ADDRESS:** www.ratchippu.in/ratchippu.in

**BANK DETAILS FOR SENDING OFFERTORY**

**NAME:** DHARMARAJA SJD.

**S.B.ACCOUNT NO**: 601071548.

**BANK:** INDIAN BANK,

**BRANCH:** NESAPAKKAM BRANCH

**IFSC CODE:** IDIB000N122.

**BANK ADDRESS:** K.K.NAGAR, CHENNAI-78.

**GOOGLE PAY (G-PAY) NAME AND NO.:** REV. DHARMARAJA SJD: 9789914463

## பெந்தெகொஸ்தே திருநாள் நல்வாழ்த்துக்கள்

**இரட்சிப்பு** பத்திரிக்கையின் அன்பான வாசகர்கள், ஆதர வாளர்கள், படைப்பாளர்கள், அலுவலக-வலைதள பணியா ளர்கள், நல்ல-விதைகள்-கைபிரதி களப்பணியாளர்கள், அச்சகத்தார், தபால்-துறை அன்பர்கள், அனைத்துத் திருச் சபை விசுவாசக் குடும்பத்தார் ஆகிய உங்கள் அனைவ ருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த பெந்தெகொஸ்தே-2023 நல்வாழ்த்துக்கள்.
கர்த்தர் உங்களை

**இரட்சிப்பு**
ஊழிய-குடும்பத்தார்



Ratchippu Tamil Monthly. Registered News Paper.
Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
Due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 10th May 2023.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.

# செய்தித்துளிகள்

1. உலக மக்கள் தொகையில் சீனாவை பின்னுக்குத் தள்ளி, இந்தியா முதலிடம் பெற்றது. சீனாவின் மக்கள் தொகை 142.57கோடி. ஆனால், இந்திய மக்கள்தொகை 142.86கோடி என, ஐ.நா. நிதியம் அறிவிப்பு.

2. அனைவரும் ஏற்கக்கூடிய நகரமாக விசாகப்பட்டினம் இருப்பதால், செப்-2023முதல் ஆந்திராவின் புதிய தலை நகராக விசாகப்பட்டினம் செயல்படும். தாமும் அங்கே தங்குவதாக முதல்-மந்திரி ஜெகன்மோகன் அறிவிப்பு.

3.திருவனந்தபுரம்-சென்னை (சேலம்-வழி) கோடை சிறப்பு ரெயில் (எண்:06044) வரும் மே-ஜூன் முழுவதும் புதன் கிழமைகளிலும், மறுமார்க்கவண்டி (எண்:06043) வியாழக் கிழமைகளிலும் இயக்கப்படும் - தென்னக இரயில்வே.

4. உலகளவில் டயர்களுக்கான வலிமை-சோதனையில் 100க்கு 83மதிப்பெண் பெற்று எம்ஆர்எப் 2ம் இடத்தையும் மிச்செலின், குட்இயர் நிறுவனங்கள் முறையே 1ம், 3ம் இடங்களையும் பெற்றன - பிராண்ட் பைனான்ஸ் தகவல்.

5. சர்வதேச அலைசறுக்கு (சர்∴பிங்) ஓபன் போட்டி மாமல்லபுரத்தில் இவ்வாண்டு ஆக-14ம் தேதி தொடக்கம். இந்தியாவில் முதன்முதல் நடைபெறும் இப்போட்டிகளில் 100கும் மேற்பட்ட சர்வதேச வீரர்-வீராங்கனைகள் பங்கு பெறுகிறார்கள் - இந்திய சர்∴பிங் சம்மேளனம் தகவல்.

**Posted on: 10th May 2023**

**To**

If undelivered Please return to:

**REV.S.J.D. DHARMARAJA**
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2-A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI -93 TAMIL NADU SOUTH INDIA

Owned & Published by: S.J.D. Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.